# நமது தின கனி

காலை நாளிதழ்

NAMADHU DHINA KANI Daily Morning

| Vol : 01 | Issue : 89 | 4 Pages | 31.10.2023 | Tuesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர் : 01 | இதழ் : 89 | 4 பக்கங்கள் | 31.10.2023 | செவ்வாய்க்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |


## இஸ்ரேல் படையினருடன் ஹமாஸ் அமைப்பு கடும் சண்டை 12 ஆயிரம் பேர் மருத்துவமனையை விட்டு வெளியேற உத்தரவு



காசா, அக். 31

இஸ்ரேல்ஹமாஸ் அமைப்பினர் இடையே நடந்து வரும் சண்டை 3 வாரங்களைதாண்டி நீடித்து வருகிறது. இந்த போரில் இஸ்ரேலில் ஹமாஸ் நடத்திய தாக்குதலில் 1,400 பேர் பலியானார்கள்.

இதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் இஸ்ரேல் ராணுவம் காசா பகுதியில் கடுமையான தாக்குதல் நடத்தியது. இதில் காசாவில் 3,324 குழந்தைகள் உள்பட 8ஆயிரம் பேர் உயிர் இழந்து விட்டனர். குண்டு வீச்சுக்கு தாக்கு பிடிக்க முடியாமல் காசாவில் பல கட்டிடங்கள் உருக்குலைந்து விட்டது.

இதுவரை வான் மற்றும் கடல் வழியாக குண்டுகளை வீசி வந்த இஸ்ரேல் ராணுவ படையினர் கடந்த வெள்ளிக்கிழமை முதல் தரை வழி தாக்குதலையும் நடத்தி வருகின்றது. காசாவை முற்றுகையிட்டுள்ள இஸ்ரேல் படையினர் பீரங்கி வண்டிகளுடன் நகருக்குள் ஊடுருவி கடுமையான தாக்குதலில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஹமாஸ் அமைப்பினர் காசாவில் உள்ள சுரங்க பதுங்கு குழிக்குள் உள்ளனர். இந்த இலக்குகளை குறி வைத்து இஸ்ரேல் போர் விமானங்கள் குண்டுகளை வீசி வருகிறது.

கடந்த 24 மணி நேரத்தில் 450க்கும் மேற்பட்ட ஹமாஸ் அமைப்பினரின் பதுங்கு குழிகள் அழிக்கப்பட்டுள்ளதாக இஸ்ரேல் ராணுவம் தெரிவித்துள்ளது.

இந்த தொடர் தாக்குதலில் பலர் கொல்லப்பட்டதாக தெரிகிறது. இஸ்ரேல் படைகளை எதிர்த்து ஹமாஸ் படையினரும் போரிட்டு வருகின்றனர். அவர்கள் ராக்கெட்டுகளை வீசி தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

வடமேற்கு காசா பகுதியில் எங்கள் போராளிகள் இஸ்ரேல் படையுடன் எந்திர துப்பாக்கி மற்றும் பீரங்கிகளை தாக்கி அழிக்கும் ஏவுகணைகள் மூலம் எதிர்தாக்குதல் நடத்தி வருவதாக ஹமாஸ் படை தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் காசாவில் உள்ள மிகப்பெரிய ஆஸ்பத்திரியில் ஹமாஸ் படையினர் தங்களின் ரகசிய தளம் அமைத்துள்ளதாக இஸ்ரேல் குற்றம் சாட்டியது. இது தொடர்பான சில புகைப்படங்களையும் இஸ்ரேல் வெளியிட்டது. இந்த ஆஸ்பத்திரியில் தான் உயிருக்கு பயந்து 12 ஆயிரம் பொது மக்கள் தஞ்சம் அடைந்துள்ளனர்.

இதனால் இந்த ஆஸ்பத்திரி அருகே உள்ள ஹமாஸ் இலக்குகளை குறி வைத்து இஸ்ரேல் தாக்குதல் நடத்தி வருகிறது. இஸ்ரேல் போர் விமானங்கள் இங்கு தொடர்ந்து குண்டுகளை வீசி வருவதால் ஆஸ்பத்திரியில் பதுங்கி இருக்கும் பொதுமக்கள் அச்சத்துடன் உள்ளனர்.

போர் தீவிரம் அடைந்துள்ளதால் 12 ஆயிரம் பேரையும் உடனடியாக ஆஸ்பத்திரியில் இருந்து வெளியேறும்படி உத்தரவிடப்பட்டு உள்ளதாக தகவல்கள் வெளியாகி இருக்கிறது.

## பிரேசிலில் நடந்த விமான விபத்தில் குழந்தை உள்பட 12 பேர் பலி

ரியோ பிரான்சோ, அக். 31

பிரேசிலின்அமேசானாஸ் மாநிலத்தில் உள்ள என்விரா என்ற நகரத்துக்கு சிறிய ரக விமானம் புறப்பட்டு சென்றது. இந்த விமானத்தில் ஒரு குழந்தை உள்பட 12 பேர் பயணம் செய்தனர்.

புறப்பட்ட சிறிது நேரத்தில் அந்த விமானம் விபத்தில் சிக்கியது. அங்குள்ள ஏக்கர் மாநிலத்தின் தலைநகரான ரியோபிரான்சிகோ விமான நிலையத்தின் அருகில் அந்த விமானம் கட்டுப்பாட்டை இழந்து கீழே விழுந்து நொறுங்கியது. இந்த விபத்தில் விமானத்தில் இருந்த ஒரு குழந்தை உள்பட 12 பேரும் பலியாகி விட்டனர். விபத்துக்கான காரணம் என்னவென்று தெரியவில்லை. இது தொடர்பாக விரிவான விசாரணை நடத்த உத்தரவிடப்பட்டு உள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பிரேசிலில் கடந்த 2 மாதங்களில் நடந்த 2 வது விமான விபத்து இது என்பது குறிப்பிடத்தக்கது. கடந்த மாதம் நடந்த விமான விபத்தில் 12 பயணிகள் மற்றும் 2 விமான ஊழியர்கள் பலியானார்கள்.

## இஸ்ரேலில் இருந்து வந்த விமானம்: யூதர்களை தேடிய கும்பல் ரஷிய விமான நிலையத்தில் பரபரப்பு

ரஷ்யா, அக். 31

ஹமாஸ்பயங்கரவாதிகள்இஸ்ரேல்நாட்டில்நுழைந்துதாக்குதல்நடத்தினர். இதனால் இஸ்ரேல் ராணுவம் காசா மீது தொடர் தாக்குதல் நடத்தி வருகிறது. இதில் பாலஸ்தீனர்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பாலஸ்தீனர்கள் தாக்கப்படுவதற்கு எதிராக பல்வேறு நாடுகளில் உள்ள, பாலஸ்தீன ஆதரவாளர்கள் இஸ்ரேலுக்கு எதிராக போராட்டம் நடத்தி வருகின்றனர். இந்த நிலையில் ரஷியாவில் உள்ள டகேஸ்டன் பிராந்தியத்தின் தலைநகர் மகாசகலா விமான நிலையத்திற்கு நேற்றிரவு இஸ்ரேலின் டெல் அவிவ் விமான நிலையத்தில் இருந்து, ரஷியாவின் ரெட் விங்ஸ் விமானம் வந்தடைந்தது. இதில் நூற்றுக்கும் அதிகமான பயணிகள் இருந்தனர். ஏற்கனவே இஸ்ரேல் மீது கோபத்தில் இருந்த சிலர், கும்பலாக விமான நிலையத்திற்குள் புகுந்தனர். விமானத்தைதரையிறக்க எதிர்ப்பு தெரிவித்தனர். பாலஸ்தீன கொடியுடன் விமான ஓடுதளத்தில் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

காவல்துறை மற்றும் விமான நிலைய அதிகாரிகள் கார்களை முற்றுகையிட்டனர். விமானத்தில் இருந்து இறங்கிய பயணிகளை பிடித்து, அவர்களுடைய பாஸ்போர்ட்களை சரிபார்த்தனர். அப்போது இஸ்ரேல் நாட்டைச் சேர்ந்தவரா? யூத மதத்தைச் சேர்ந்தவர்களா? என பார்த்தனர். இதனால் பரபரப்பு ஏற்பட்டது. திடீரென கும்பல் ஒன்று விமான நிலையத்திற்குள் புகுந்ததால், பணியாளர்களால் ஒன்றும் செய்யமுடியவில்லை. சிறிது நேரம் கூச்சல் குழப்பம் ஏற்பட்டது. இந்த நிகழ்வால் சிலர் காயம் அடைந்ததாக கூறப்படுகிறது.

உடனடியாக விமான நிலையம் மூடப்பட்டது. பின்னர் ஓடுதளத்தில் இருந்து கும்பல் வெளியேற்றப்பட்டனர். எனினும், நவம்பர் 6ந்தேதி வரை இந்த விமான நிலையத்தில் வெளிநாட்டில் இருந்து வரும் விமானங்களுக்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது. இந்த செய்தி வெளியானதும், இஸ்ரேல் பிரதமர் நேதன்யாகு "போராட்டக்காரர்களிடம் இருந்து இஸ்ரேல் மக்களை ரஷியா அதிகாரிகள்பாதுகாப்பார்கள்எனஎதிர்பார்க்கிறோம்"எனக்குறிப்பிட்டுள்ளார்.

டகேஸ்டன் பிராந்தியம் இஸ்லாமியர் நிறைந்ததாகும்.

# 116–வது ஜெயந்தி, 61–வது குருபூஜை விழா: பசும்பொன் தேவர் நினைவிடத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் மரியாதை

ராமநாதபுரம், அக். 31

ராமநாதபுரம் மாவட்டம் கமுதி அருகே பசும்பொன் கிராமத்தில் முத்துராமலிங்க தேவரின் நினைவிடம் அமைந்துள்ளது. இங்கு ஆண்டு தோறும் அவரது ஜெயந்தி மற்றும் குருபூஜை விழா 3 நாட்கள் வெகு விமரிசையாக நடத்தப்படும். அந்த வகையில் தற்போது 116வது ஜெயந்தி மற்றும் 61வது குருபூஜை விழா தொடங்கியது.



முதல் நாளான 28ந் தேதி முத்துராமலிங்க தேவரின் ஆன்மீக விழா நினைவாலய பொறுப்பாளர் காந்தி மீனாள் நடராஜன் தலைமையில் தொடங்கி நடைபெற்றது. அங்கு தமிழக அரசு சார்பில் தேவரின் புகைப்பட கண்காட்சியும் அமைக்கப்பட்டிருந்தது.

பொதுமக்கள் ஏராளமானோர் பால்குடம், ஜோதி, முளைப்பாரி எடுத்து நேர்த்திக்கடன் செலுத்தினர். 2ம் நாளான நேற்று அரசியல் விழாவாக நடைபெற்றது. இதில் தேவரின் அரசியல் பயணம் குறித்து சொற்பொழிவுகள் நடைபெற்றது. நிறைவு நாளான இன்று முத்துராமலிங்க தேவரின் ஜெயந்தி மற்றும் குருபூஜை விழாவாக நடைபெற்றது.

இதையொட்டி அவரது நினைவிடம் அமைந்துள்ள பசும்பொன் விழாக்கோலம் பூண்டிருந்தது. அவரது நினைவிடத்தில் மரியாதை செலுத்துவதற்காக தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் சென்னையில் இருந்து நேற்று இரவு விமானம் மூலம் மதுரை வந்தார். அங்கு அமைச்சர்கள் மற்றும் எம்.பி., எம்.எல்.ஏ.க்கள் வரவேற்றனர்.

புதூர் செல்லும் சாலையில் உள்ள அரசு விருந்தினர் மாளிகையில் இரவு தங்கிய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று காலை 7.30 மணிக்கு அங்கிருந்து புறப்பட்டு 7.40 மணிக்கு கோரிப்பாளையத்தில் உள்ள முத்துராமலிங்க தேவர் சிலைக்கு மாலை அணிவித்தார். பின்னர் சிலைக்கு கீழே அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த தேவரின் உருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

இந்நிகழ்ச்சியில் அமைச்சர்கள், கட்சியினர் பங்கேற்றனர்.

# காங்கயம் துளிகள் அமைப்பின் சார்பில் மரக்கன்றுகள் நடும் விழா

காங்கயம், அக். 31

காங்கயம் துளிகள் அமைப்பு சார்பில் காங்கயம் மற்றும் அதன் சுற்று வட்டார பகுதிகளில் மரக்கன்றுகள் நடுவது, குளம் குட்டைகளை தூர் வார்வது போன்ற பணிகள் செய்யப்பட்டு வருகின்றது. சிவன்மலை ஊராட்சியுடன் இணைந்து கருங்கல் வனம் எனும் பூங்கா அமைத்து அதில் அரியவகை மரங்கள் மற்றும் அழிந்து வரும் மரக்கன்றுகளையும் நட்டுள்ளனர். மேலும் இதுவரை 800 பனை விதைகள் நடவு செய்யப்பட்டுள்ளது. இதுவரை 23 ஆயிரத்து 750மரக்கன்றுகள்நடப்பட்டுள்ளது.

இதன் தொடர்ச்சியாக 131வது கட்டமாக வெள்ளகோவிலை அடுத்த வீரசோழபுரம் ஊராட்சி பெரிய கோவில் அடஞ்சாரம்மன் கோவில் வளாகத்தில் மரக்கன்றுகள் நடும் விழா நடைபெற்றது.

விழாவில் வெள்ளகோவில் ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் ஜெகதீஸ், சிவாஸ் பேப்பர் மில் சி.சண்முகராஜ், சபரி கன்ஸ்ட்ரக்சன் வி.தங்கமுத்து, அம்மன் கன்ஸ்ட்ரக்சன் சக்திவேல் முருகன், வீரசோழபுரம் ஜி. பாலசுப்பிரமணியம் மற்றும் வார்டு உறுப்பினர்கள், கிராம பொதுமக்கள், காங்கயம் துளிகள் அமைப்பின் உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டு மரக்கன்றுகளை நட்டு தொடங்கி வைத்தனர்.



# ஏழை மக்கள் நலனில் அக்கறை கொள்ளாத தி.மு.க., அரசை விரைவில் வீட்டிற்கு அனுப்ப வேண்டும்: முன்னாள் அமைச்சர் செல்வராஜ் பேச்சு

திருப்பூர், அக். 31

திருமுருகன்பூண்டி நகர அ.தி.மு.க.சார்பில் 52ம் ஆண்டு தொடக்க விழா பொதுக்கூட்டம் திருமுருகன்பூண்டி சந்திப்பில் நடைபெற்றது. கூட்டத்தில் முன்னாள் அமைச்சரும், மேட்டுப்பாளையம் தொகுதி எம்.எல்.ஏ.வுமான செல்வராஜ், அ.தி.மு.க. தலைமை பேச்சாளர்அறிவானந்தம் ஆகியோர்கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள். அப்போது செல்வராஜ் எம்.எல்.ஏ. பேசியதாவது:



அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி முதல்அமைச்சராக பொறுப்பேற்று 4 ஆண்டுகள் நல்லாட்சியை தந்தார். இன்று தி.மு.க. ஆட்சியில் 52 சதவீதம் மின்கட்டணம் உயர்ந்துள்ளது. சொத்து வரி அதிகமாக உயர்ந்துள்ளது. தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாத அரசாக தி.மு.க. ஆட்சி உள்ளது. அ.தி.மு.க. ஆட்சி காலத்தில் கொண்டு வரப்பட்ட அனைத்துதிட்டங்களையும்முடக்கி உள்ளனர்.

நாங்கள் ஆட்சிக்கு வந்தால் ஒரே கையெழுத்தில் நீட் தேர்வை ரத்து செய்வோம் என்று உதயநிதி ஸ்டாலின் தேர்தலின்போது வாக்குறுதி கொடுத்தார். ஆனால் இன்று வரை அதை ரத்து செய்ய முடியாமல் கையெழுத்து வாங்கிக் கொண்டிருக்கின்றனர். ஏழை மக்கள் நலனில் அக்கறை கொள்ளாத தி.மு.க. அரசை விரைவில் வீட்டிற்கு அனுப்ப வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

# விசைத்தறி தொழிலாளர்களுக்கு 13.50 சதவீதம் போனஸ்

அவிநாசி, அக். 31

அவிநாசி பகுதி விசைத்தறி தொழிலாளர்களுக்கு இந்த ஆண்டு 13.50 சதவீதம் போனஸ் வழங்குவது என இருதரப்பு பேச்சுவார்த்தையில் உடன்பாடு ஏற்பட்டது. அவிநாசி ஒன்றிய பகுதியில் விசைத்தறி கூலித் துணி உற்பத்தியாளர் சங்க பிரதிநிதிகள், விசைத்தறி தொழிற்சங்க நிர்வாகிகள் இடையே பேச்சு வார்த்தை நடைபெற்றது. இதில் தீபாவளி போனஸ் 13.50 சதவீதம் வழங்குவது என ஏற்றுக் கொண்டு கையொப்பம் போடப்பட்டது. இதில் உற்பத்தியாளர்கள் சார்பில் முத்துசாமி, செந்தில், சம்பத்குமார், தொழிற்சங்கங்கள் சார்பில் சிஐடியூ., விசைத்தறி தொழிலாளர் சம்மேளன மாநிலத் தலைவர் முத்துசாமி, சிஐடியூ., விசைத்தறி தொழிலாளர் சங்க மாவட்ட துணைச்செயலா ளர் பழனிசாமி, ஏஐடியூசி., செல்வராஜ், ரவி, ஏடிபி., நடராஜ் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## அனுப்பர்பாளையம் – வேலம்பாளையத்தில் மின்தடை

திருப்பூர், அக். 31

அவினாசி மின்சார வாரிய செயற்பொறியாளர் பரஞ்சோதி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறி இருப்பதாவது: வேலம்பாளையம் துணை மின் நிலையத்தில் இன்று மாதாந்திர பராமரிப்பு பணிகள் நடைபெற உள்ளது. எனவே அன்று காலை 9 மணிமுதல் மாலை 4 மணிவரை ஆத்துப்பாளையம், 15 வேலம்பாளையம், அனுப்பர்பாளையம், திலகர்நகர், அங்கேரிபாளையம், பெரியார் காலனி, அம்மாபாளையம், அனுப்பர்பாளையம் புதூர், வெங்கமேடு, மகாவிஷ்ணுநகர், தண்ணீர்பந்தல் காலனி, ஏ.வி.பி.லே அவுட், போயம்பாளையம், சக்திநகர், பாண்டியன் நகர், நேரு நகர், குருவாயூரப்பன் நகர், நஞ்சப்பாநகர், லட்சுமிநகர், இந்திரா நகர், பிச்சம்பாளையம் புதூர், குமரன் காலனி, செட்டிபாளையம், கருப்பராயன் கோவில் ஒரு பகுதி, சொர்ணபுரி லே அவுட், ஜீவாநகர், திருமுருகன்பூண்டி விவேகானந்த கேந்திரா,டி.டி.பி.மில் ஆகிய பகுதிகளில் மின்வினியோகம்தடைசெய்யப்படும்.இவ்வாறுஅதில்கூறப்பட்டுள்ளது.


நமது தின கனி

காலை நாளிதழ்

NAMADHU DHINA KANI Daily Morning

**பத்திரிக்கையாளர்கள் என்ற பெயரில் கொள்ளையடிக்கும் விஷக்கிருமிகள்**

**பத்திரிக்கையாளர்கள் நல வாரியம் அமைத்தும் இன்னும் செயல்பாட்டுக்கு வரவில்லையா திருப்பூரில் பத்திரிக்கை என்ற பெயரில் இல்லிகளை குறி வைத்து குத்தகைக்கு எடுத்து கொள்ளையடிக்கும் கொள்ளை கும்பல் முழு நேரமாக கொள்ளையடிக்கும் பத்திரிக்கை கும்பல் பத்திரிகையில் சேர வேண்டுமா 3000 கொடுத்தால் ஐடி கார்டை தந்து விடுவோம் அதை வைத்து நீ விசிட்டிங் கார்டை அடித்துக் கொண்டு ஒயின்ஷாப் பாரு பா என்ற பெயரில் மசாஜ் சென்டர், விபச்சாரம் செய்பவர்களிடம் கவர்மெண்ட் அதிகாரிகளையும் மணல் குவாரி ரேஷன் அரிசியை அரைக்கும் நெல் குடோன் மற்றும் தவறு எங்கு நடக்கிறதோ அங்கே எல்லாம் சென்று பணம் பறித்து வந்து சாந்தரமாக பங்கு பிரிக்கும் கொள்ளை கும்பல்.**

**திருப்பூர் மாவட்ட ஆட்சியாளர் அவர்களின் கவனத்திற்கு**



**V.கனிராஜா (DCHN) ஆசிரியர் & வெளியிட்டார்**

**செல் : 9894808044**

# பொள்ளாச்சியில் இருந்து சென்னைக்கு தீபாவளி சிறப்பு ரெயில் இயக்க கோரிக்கை

உடுமலை, அக். 31

பொள்ளாச்சி ரெயில் பயணியர் நலச்சங்கத்தினர், தென்னக ரயில்வே பொதுமேலாளருக்கு மனு அனுப்பியுள்ளனர். மனுவில் கூறியிருப்பதாவது:



கோவை மாவட்டம், பொள்ளாச்சி ரெயில் சந்திப்பை அதிகளவு பயணிகள் பயன்படுத்துகின்றனர். வால்பாறை, ஆனைமலை புலிகள் காப்பகம், மூணாறு, அமராவதி, ஆழியார் அணைகள் போன்ற சுற்றுலா பகுதிகளும், ஆனைமலை மாசாணி அம்மன் கோவில், திருமூர்த்தி மலை கோவில் போன்ற, ஆன்மிக தலங்கள் உள்ளன. அருகிலுள்ள திண்டுக்கல் மாவட்டத்தில் பழநியில் முருகன் கோவில், கொடைக்கானல் சுற்றுலா பகுதிகள் உள்ளன.

புதுச்சேரியின் திருவாரூர், நாகப்பட்டிணம், மயிலாடுதுறை, புதுக்கோட்டை மற்றும் காரைக்கால் பகுதியில் பழமை வாய்ந்த கோவில்களில் தஞ்சாவூர் பெரிய கோவில், கங்கைகொண்ட சோழபுரம், வேளாங்கண்ணி, தேவாலயம் போன்ற பல்வேறு யாத்திரைமையங்கள் உள்ளன.

இந்நிலையில் பழநி, ஒட்டன்சத்திரம், உடுமலை, பொள்ளாச்சி, சென்னை தாம்பரம், எழும்பூர் இடையே நேரடி ரெயில் சேவை இல்லை.

எனவே, பொள்ளாச்சி தாம்பரம் அல்லது சென்னைஎழும்பூர் (பழநி, திண்டுக்கல், திருச்சி, விழுப்புரம் வழியாக) தினசரி இரவு நேர ரெயிலை இயக்க வேண்டும். நவம்பரில், தீபாவளி சிறப்பு ரெயிலாக இந்த ரெயிலை இயக்க வேண்டும்.

இருமார்க்கத்தில் இருந்தும் இரவு 8 மணிக்கு ரெயில் புறப்பட வேண்டும்.

இவ்வாறு மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சாலையோர ஆக்கிரமிப்பு கடைகள் அகற்றம்

அவினாசி, அக். 31

அவினாசி புதிய பஸ் நிலையம் முதல் பழைய பஸ் நிலையம் வரை சாலையோர ஆக்கிரமிப்பு கடைகள் அதிகரித்து வந்தது. இதனால் நிரந்தர கடையை வைத்திருக்கும் வியாபாரிகளுக்கு இடையூறு ஏற்படுவதுடன் போக்குவரத்து நெரிசல் மிகவும் பாதிக்கப்பட்டு அடிக்கடி சாலை விபத்துக்கள் ஏற்பட்டு வந்தது. எனவே பேரூராட்சி நிர்வாகத்தின் மூலம் ரோட்டோர ஆக்கிரமிப்பு கடைகளை அவினாசி வாரச்சந்தை வளாகத்திற்கு மாற்றுவது என தீர்மானம் நிறைவேற்ற ப்பட்டது. ஆனால் ஒரு மாதம் ஆகிய நிலையில் ஆக்கிரமிப்பு அகற்றும் நடவடிக்கை எடுக்கப்படாமல் இருந்து வந்தது.



உடனே ஆக்கிரமிப்பை அகற்ற வேண்டும் என்று அவினாசி பேரூராட்சி மன்ற வார்டு உறுப்பினர்கள் பேரூராட்சி மன்ற அலுவலக வளாகத்தில் உள்ளிருப்பு போராட்டத்தில ஈடுபட்டனர்.

இதை அடுத்து தாசில்தார் மோகனன் தலைமையில் சமரச பேச்சுவார்த்தை நடந்தது.

பேச்சுவார்த்தையின் முடிவில் ஆக்கிரமிப்புகளை ஒழுங்கு படுத்தி வாரச்சந்தை வளாகத்திற்கு அனுப்ப முடிவு செய்யப்பட்டது. அதன்படி தாசில்தார் மோகனன், பேரூராட்சி தலைவர் தனலட்சுமி, செயல் அலுவலர் இந்துமதி, துப்புரவு ஆய்வாளர் கருப்புசாமி, ஊழியர்கள், வருவாய்துறை அலுவலர்கள், நெடுஞ்சாலைத்துறையினர், போலீஸ் இன்ஸ்பெக்டர் கோவர்த்தனாம்பிகை, போக்குவரத்து இன்ஸ்பெக்டர் சக்திவேல் மற்றும் 20க்கும் மேற்பட்ட போலீசார் உள்ளிட்டோர் அவினாசி புதிய பஸ் நிலையம் வந்தனர். அப்போது அங்கு கடை அமைக்க வந்த சாலையோர வியாபாரிகளிடம் போக்குவரத்து நெரிசல், விபத்துகள் நடப்பதாலும், நிரந்தர கடை வியாபாரிகளுக்கு இடையூறு ஏற்படுவதை தவிர்க்கவும், ஏற்கனவே அறிவித்தபடி இங்கு சாலையோர வியாபாரம் செய்ய அனுமதி இல்லை. அதற்காக ஒதுக்கப்பட்டுள்ள வாரச்சந்தைபேட்டைக்கு செல்லுமாறு அறிவுறுத்தினர். அதை ஏற்க மறுத்து சாலையோர வியாபாரிகள் சிலர் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். நீண்ட நேர பேச்சுவார்த்தையின் முடிவில் தற்காலிகமாக அரசு அலுவலகங்கள் முன்பாக மட்டும் கட்டில் போட்டு கடை நடத்த அனுமதிக்கப்பட்டது. மேலும் வண்டி கடைகள், டெண்ட் கடைகள் ரோட்டில் வைக்கப்பட்டிருந்த விளம்பர பலகைகள், பிளக்ஸ் பேனர்கள், போர்டுகள் உள்ளிட்ட ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டன.

மேலும் ஒலிபெருக்கி மூலம் சாலையோர அனைத்துவியாபாரிகளும் அதற்கென ஒதுக்கப்பட்ட சந்தைபேட்டையில் வைத்துவியாபாரம்செய்ய அறிவுறுத்தப்பட்டது. அதன்படி 55 பேர் பதிவு செய்துள்ளதாக பேரூராட்சி நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

# வறட்சியை தாங்கி வளரக்கூடிய தென்னை மரங்கள் குறித்து ஆய்வு



# கேரள குண்டு வெடிப்பு சம்பவம்: திருப்பூர் ரெயில் நிலையத்தில் 2–வது நாளாக தீவிர சோதனை

திருப்பூர், அக். 31

கேரள மாநிலம் கொச்சி களமச்சேரியில் கிறிஸ்தவ ஜெபக்கூட்டம் நடந்த அரங்கத்தில்நேற்று குண்டு வெடித்தது. இதில் பலி மற்றும் காயம் பாதிப்பு ஏற்பட்டது.

இதன் காரணமாக தமிழகம் முழுவதும் பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் பொதுமக்கள் அதிகம் கூடும் பகுதிகளான ரெயில்வே நிலையம் மற்றும் பஸ் நிலையம் ஆகிய பகுதிகளில் போலீசார் உஷார்படுத்தப்பட்டுள்ளனர்.

இதன் ஒரு பகுதியாக திருப்பூர் ரெயில் நிலையத்தில் நேற்று மாலை ரெயில்வே பாதுகாப்பு படை உதவி ஆய்வாளர் மாதேஸ்வரன் மற்றும் துணை உதவி ஆய்வாளர் லிஜோ மற்றும் ரெயில்வே பாதுகாப்பு படையினர் மோப்பநாய் உதவியுடன் திருப்பூர் ரெயில் நிலையத்தில் பயணிகளின் உடைமைகளை சோதனை செய்தனர்.

மேலும் ரெயில் மற்றும் நடைமேடைகள், கார் மற்றும் மோட்டார் சைக்கிள் நிறுத்தும் இடங்களிலும் சோதனை மேற்கொள்ளப்பட்டது.

இன்று 2வது நாளாக திருப்பூர் ரெயில் நிலையம் முழுவதும் ரெயில்வே பாதுகாப்பு போலீசார் மற்றும் ரெயில்வே போலீசார் தீவிர சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர்.

# அத்திக்கடவு–அவிநாசி திட்டத்தை மக்கள் பயன்பாட்டுக்கு கொண்டு வர வேண்டும்: மத்திய இணை அமைச்சர் எல்.முருகன் பேட்டி

அவிநாசி, அக். 31

திருப்பூர் திருமுருகன்பூண்டியில் பாஜக., நகர அலுவலகம் திறப்பு விழா, பிரதமர் மோடியின் மனதின் குரல் நிகழ்ச்சி, மாற்றுக் கட்சியினர் இணைப்பு விழா ஆகியவை நடைபெற்றன.



இதில் சிறப்பு அழைப்பாளராக பங்கேற்ற மத்திய இணை அமைச்சர் எல். முருகன் நிருபர்களிடம் கூறியதாவது:

விவசாயிகளின் நீண்டநாள் கனவுத்திட்டமான அத்திக்கடவு அவிநாசி திட்டப்பணிகள் நிறைவடைந்து 30 மாதங்கள் ஆகியும், அரசியல் நோக்கத்துக்காக அத்திட்டத்தை திமுக., நிறுத்தி வைத்துள்ளது. இத்திட்டத்தை மக்கள் பயன்பாட்டுக்கு கொண்டு வர வேண்டும்.

இந்தியா கூட்டணி ஆட்சி நடக்கும் மாநிலங்களில் தீவிரவாதம் தலைதூக்கி, தேச துரோகிகள் நடமாட்டம் அதிகரித்துள்ளது. கடந்த சில நாள்களுக்கு முன் கோவையில் பாலஸ்தீன கொடியேற்றி உள்ளனர். சென்னை கிரிக்கெட் மைதானத்தில் பாகிஸ்தான் வாழ்க கோஷம் எழுப்பப்பட்டுள்ளது.

கேரள மாநிலம் கொச்சி அருகே கிறிஸ்துவ ஜெபக் கூட்டத்தில் குண்டு வெடிப்பு சம்பவம் நடைபெற்றுள்ளது. தமிழக ஆளுநர் மாளிகை முன் பெட்ரோல் குண்டு வீச்சு சம்பவம் நடைபெற்றுள்ளது. இதனை என்.ஐ.ஏ. விசாரிக்க வேண்டும். அந்த சம்பவங்களின் பின்னணியில் யார் உள்ளனர்.

யார் உதவி செய்கின்றனர் என்பதை கண்டுபிடிக்க வேண்டும். தேர்தல் கூட்டணி குறித்து தேசிய தலைமை முடிவு செய்யும். பாஜகவை பொறுத்தவரைகட்சியை பலப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன. விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன் எந்த நேரத்தில் என்ன பேசுவார் என்பது அவருக்கே தெரியாது என்றார்.



திருப்பூர், அக். 31

தமிழ்நாடு கல்வித்துறை நிர்வாக அலுவலர்கள் சங்க 3வது மாவட்ட மாநாடு திருப்பூர் டவுண் ஹால் அருகேயுள்ள ஒரு கூட்டரங்கில் நடைபெற்றது.

மாவட்ட தலைவர் நந்தகுமார், துணைத்தலைவர் சரவணமூர்த்தி ஆகியோர் தலைமை தாங்கினர். புதிய ஓய்வூதிய திட்டத்தை ரத்து செய்து பழைய பென்சன் திட்டத்தை அமல்படுத்த வேண்டும். கல்வித்துறையில் 10 ஆண்டுகளுக்கு மேலாக தொகுப்பு ஊதியத்தில் பணிபுரிந்து வரும் பணியாளர்களுக்கு காலமுறை ஊதியம் வழங்க வேண்டும்.

பள்ளிகளில் பணிபுரியும் ஆய்வக உதவியாளர்களுக்கு பதவி உயர்வு வழங்க வேண்டும். இளநிலை உதவியாளர்களின் பதவி உயர்வுக்கு தடையாக உள்ள நேரடி நியமன உதவியாளர் முறையினை ரத்து செய்ய வேண்டும். கருணை அடிப்படையில் பணிக்காக காத்திருப்போருக்கு உடனடியாக பணி வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும். அமைச்சுப் பணியாளர்களுக்கு ஆண்டுக்கு ஒருமுறை பொதுமாறுதல் மூலம் விருப்ப மாறுதல் கலந்தாய்வு நடத்த வேண்டும் உள்பட பல்வேறு கோரிக்கைகளை நிறைவேற்றக்கோரி மாநாட்டில் வலியுறுத்தப்பட்டது. முடிவில் மாவட்ட துணைத்தலைவர் கணேசன் நன்றி கூறினார்.

# பழையகோட்டை மாட்டுச்சந்தையில் ரூ.13 லட்சத்துக்கு காங்கேயம் இன மாடுகள் விற்பனை

முத்தூர், அக். 31

திருப்பூர் மாவட்டம், காங்கயம் அருகே நத்தக்காடையூர்பழையகோட்டையில் காங்கேயம் இன மாடுகளுக்கான பிரத்யேக சந்தை வாரந்தோறும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறுகிறது.



இந்நிலையில், ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற சந்தையில் மாடுகள், காளைகள், இளங்கன்றுகள் என 90 மாடுகள் விற்பனைக்கு கொண்டு வரப்பட்டிருந்தன. இதில் 35 மாடுகள் மொத்தம் ரூ.13 லட்சத்துக்கு விற்பனையாயின. இந்த சந்தையில் அதிகபட்சமாக ரூ.71 ஆயிரத்துக்கு கன்றுக் குட்டியுடன் காங்கேயம் இன மயிலை வகைப் பசு விற்பனையானது.

# உடுமலை அருகே டாஸ்மாக் கடைக்கு எதிர்ப்பு தெரிவித்து பொதுமக்கள் சாலை மறியல் பதற்றம்

உடுமலை, அக். 31

திருப்பூர் மாவட்டம் உடுமலை அருகே உள்ள விருகல்பட்டியில் அரசு மதுபான கடை உள்ளது. தற்போது இந்த கடையை மூங்கில்தொழுவு அருகே உள்ள வி.வேலூர் பகுதிக்கு மாற்ற சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுத்தனர். இந்நிலையில் வி.வேலூர் பகுதியை சுற்றி உள்ள சுமார் 15க்கும் மேற்பட்ட கிராம மக்கள் இன்று (செவ்வாய்க்கிழமை) காலையில் திடீரென ஒன்று திரண்டு இங்கு மதுக்கடை அமைக்கக்கூடாது என்ற கோஷத்துடன் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.



இதுகுறித்து தகவல் அறிந்ததும் உடுமலை போலீஸ் டி.எஸ்.பி. சுகுமாறன் தலைமையில் 80க்கும் மேற்பட்ட போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று அசம்பாவித சம்பவம் எதுவும் நடைபெறாமல் இருக்க பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.

மேலும் இதுகுறித்து பேச்சுவார்த்தை நடத்த அதிகாரிகள் யாரும் சம்பவ இடத்திற்கு வரவில்லை. இதனால் சுமார் 2 மணி நேரம் தொடர்ந்து போராட்டம் நடந்தது. இதன் காரணமாக அப்பகுதியில் போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டது. மேலும் இதற்கு முடிவு தெரியாமல் இந்த இடத்தை விட்டு நகரமாட்டோம் என்று பொதுமக்கள் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். இது குறித்து வி. வேலூர் பகுதியை சேர்ந்த பொதுமக்கள் கூறும் போது: புதிதாக அமையஉள்ள மதுக்கடையை சுற்றிலும் ஏராளமான குடும்பத்தினர் வசித்து வருகிறார்கள். அனைத்து மக்களும் இந்த மதுக்கடை வழியாகத்தான் சென்று வர வேண்டிய இடமாக உள்ளது. இதனால் இங்கு வரும் மதுபிரியர்களால் எங்களுக்கு பெரும் தொல்லைகள் ஏற்பட வாய்ப்புகள் உள்ளது. தற்போது நாங்கள் நிம்மதியாக வாழ்ந்து வரும் நிலையில், இந்த மதுக்கடையால் பிரச்சினைகள் அதிகம் வர வாய்ப்புகள் உள்ளது. எனவே மதுக்கடையை இப்பகுதியில் அமைக்க

# துல்லியமான வாக்காளர் பட்டியல் அவசியம்: அரசியல் கட்சியினர் வலியுறுத்தல்

திருப்பூர், அக். 31

பாராளுமன்ற தேர்தல் நடக்கவுள்ள நிலையில், தேர்தலை எதிர்கொள்ள அரசியல் கட்சிகள் தயாராகி வருகின்றன. வாக்காளர் பட்டியலில் துல்லியத்தன்மை கொண்டு வரும் முயற்சியாக புதிய வாக்காளர்களுக்கு, ஓட்டளிக்கும் உரிமையை வழங்க தேர்தல் ஆணையமும் தயாராகி வருகிறது. அதற்கேற்ப வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க, நீக்க, முகவரி மாற்றம் செய்யும் வகையில் வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

பூத் ஏஜெண்ட்கள் வாயிலாக வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் பணி மேற்கொள்ள கட்சித்தலைமை அறிவுறுத்தியுள்ளது. வார்டு வாரியாக கட்சியை பலப்படுத்தும் பணி நடந்து வருகிறது. இந்நிலையில் துல்லியமான வாக்காளர் பட்டியல் அவசியம் என அரசியல் கட்சியினர் வலியுறுத்தியுள்ளனர்.



இது குறித்து பா.ஜ.க.வினர் கூறுகையில், வரைவு வாக்காளர் பட்டியலில், இறந்தவர்கள் பெயர், இரட்டைப் பதிவு அதிக அளவில் உள்ளது. வாக்காளர் பட்டியலுடன் வாக்காளர்களின் ஆதார் எண் இணைத்தால் மட்டுமே இப்பிரச்னைக்கு தீர்வு கிடைக்கும். முந்தைய காலங்களில் தேர்தல் பணியில் ஈடுபடும் ஆசிரியர்கள் மற்றும் அலுவலர்கள் வீடு, வீடாக சென்று வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பு பணியில் ஈடுபடுவர். தற்போது அத்தகைய பணிகள் நடப்பதில்லை என்றனர்.

தி.மு.க.வினர் கூறுகையில், பூத் ஏஜென்டுகள் வாயிலாக, புதிய வாக்காளர்களை அடையாளம் கண்டு அவர்களை வாக்காளர் பட்டியலில் சேர்க்க, கட்சித்தலைமை அறிவுறுத்தியுள்ளது. இறந்தவர், இரட்டை பதிவு உள்ளோர் விவரங்களை சேகரித்து அவற்றை நீக்க வேண்டும் என அதிகாரிகளிடம் கூறினாலும், அவர்கள் அந்த பணியை செய்வதில்லை. இறந்தவர் பெயரை வாக்காளர்பட்டியலில் இருந்து நீக்க வேண்டும் என்ற விழிப்புணர்வு அவர்களது குடும்பத்தினரிடமும் இல்லை என்றனர்.

அ.தி.மு.க.வினர் கூறுகையில், வார்டு வாரியாக உள்ள பூத் ஏஜென்ட்களிடம் வரைவு வாக்காளர் பட்டியல் பிரித்து வழங்கப்பட்டுள்ளது. அவற்றை சரிபார்க்க அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. வாக்காளர் பட்டியலில் இறப்பு மற்றும் இரட்டை பதிவுகள் அதிகம் உள்ளன. அவை சரிசெய்யப் பட வேண்டும் என்றனர்.

# சிறுமிக்கு பாலியல் தொல்லை: போக்சோ சட்டத்தில் வாலிபர் கைது

பல்லடம், அக். 31

பல்லடம் அருகே உள்ள கரடிவாவிபுதூர் கிராமத்தை சேர்ந்த ஆறுச்சாமி என்பவரது மகன் முத்துவேல் (20). டிரைவர். இவர் 15 வயது சிறுமியை காதலிப்பதாக கூறி அந்த சிறுமியை பாலியல் சீண்டல் செய்துள்ளார். இது குறித்து சிறுமியின் பெற்றோர் பல்லடம் அனைத்து மகளிர் போலீசில் புகார் அளித்தனர். புகாரின் பேரில் போலீசார் போக்சோ சட்டத்தில் முத்துவேலை கைது செய்தனர். பின்னர் அவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்

நமது தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066

# கே.எம். நிட்வேர் நிறுவன கலாசார மையம் திறப்பு விழா: வடமாநில தொழிலாளர்களுக்காக கோவை தன்பாத் ரெயிலை தினசரி இயக்க நடவடிக்கை ஜார்கண்ட் கவர்னர் சி.பி.ராதா

திருப்பூர், அக். 31

அவினாசி அருகே வேலூர் பகுதியில் கே.எம்.நிட்வேர்பனியன்நிறுவனத்தின் 12வது தொழிற்சாலை செயல்பட்டு வருகின்றது. இந்த நிறுவனத்தில் பீகார், ஜார்கண்ட் உள்ளிட்ட வட மாநிலங்களை சேர்ந்த தொழிலாளர்கள் ஏராளமானோர் பணியாற்றி வருகிறார்கள். இந்த நிறுவன வளாகத்தில் கே.எம். நிட்வேர் நிர்வாக இயக்குனர் கே.எம். சுப்பிரமணியனின் பெற்றோர் நினைவாக முத்துசாமிமுத்தம்மாள் கலாசார மையம் திறப்புவிழா நடைபெற்றது.

விழாவுக்கு திருப்பூர் ஏற்றுமதியாளர்கள்சங்கத்தின் தலைவரும், கே.எம். நிட்வேர்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் நிர்வாக இயக்குனருமான கே.எம்.சுப்பிரமணியன் தலைமை தாங்கினார். ஜார்கண்ட் மாநில கவர்னர் சி.பி.ராதாகிருஷ்ணன் சிறப்பு விருந்தினராக பங்



கேற்று முத்துசாமி முத்தம்மாள் கலாசார மையம் மற்றும் பெயர் பலகையை திறந்து வைத்தார். கே.எம்.நிட்வேர்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் இணை நிர்வாக இயக்குனர் விஷ்ணுபிரபு வரவேற்றார்.

விழாவில், ஜார்கண்ட் மாநில கவர்னர் சி.பி.ராதாகிருஷ்ணன் பேசியதாவது: பீகார், ஜார்கண்ட் போன்ற வட மாநில தொழிலாளர்களின் நண்மைக்காக, கோவை வழியாக தன்பாத்துக்கு வாரம் ஒருமுறை மட்டுமே ரெயில் செல்கிறது. இந்த ரெயிலை கோவையிலிருந்து தினசரி செல்லும் ரெயிலாக மாற்றியமைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும். வட மாநில தொழிலாளர்கள் மகிழ்ச்சியாக தமிழ்நாட்டில் பணியாற்றும் சூழ்நிலையில், அவர்களுக்கு எந்த பிரச்சினையாக இருந்தாலும், ஓடிவந்து உதவி செய்வேன்.கே.எம்.நிட்வேர்ஸ் போன்ற பெரிய பனியன் நிறுவனங்கள் ஜார்கண்ட் மாநிலத்தில்தங்களது பனியன்நிறுவனங்களை ஆரம்பித்து, அங்குள்ள மக்களுக்கு அதிகளவு வேலை வாய்ப்புகளை வழங்க வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

இதைத்தொடர்ந்து ஜார்கண்ட் மாநில பெண் தொழிலாளர்களின் பரத நாட்டியம், கலை, கலாசாரத்துடன் பல்வேறு கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. முடிவில் கே.எம். நிட்வேர்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் செயல் இயக்குனர் கார்த்திக் பிரபு நன்றி கூறினார். இந்த விழாவில் ஜெய்ஸ்ரீ ராம்கல்விநிறுவனங்களின் தலைவர் கே.எம்.தங்கராஜ், டாலர் அப்பேரல்ஸ் நிர்வாக இயக்குனர் ராமமூர்த்தி, மணி அப்பேரல்ஸ் நிர்வாக இயக்குனர் பாலசுப்பிரமணி, பரணி நிட்டிங் மில்ஸ் நிர்வாக இயக்குனர் ஹரிசஷ்டிவேல், இயக்குனர் மதுமிதா, கே.எம்.நிட்வேர்ஸ் இயக்குனர் மகேசுவரி சுப்பிரமணியம், எஸ்.ஆர்.வி.நிட்ஸ் நிர்வாக இயக்குனர் பாலுசாமி உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர்.

# முத்தூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் ரூ.1.10 லட்சத்துக்கு கொப்பரை ஏலம்

முத்தூர், அக். 31

முத்தூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் ரூ.1.10 லட்சத்துக்கு கொப்பரை ஏலம் நடைபெற்றது.

முத்தூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் வாரந்தோறும் சனிக்கிழமைகளில் கொப்பரை ஏலம் நடைபெறும். அதன்படி நேற்று நடைபெற்ற கொப்பரை ஏலத்தில் 1330 கிலோ தேங்காய் பருப்பு வந்தது. இதில் அதிகபட்சமாக ஒரு கிலோ ரூ. 91.10க்கும், குறைந்த பட்சமாக ரூ.63.10 க்கும் ஏலம்



போனது.

மொத்தம் 1330 கிலோ கொப்பரை ரூ.1 லட்சத்து 10 ஆயிரத்துக்கு ஏலம் நடைபெற்றது.

முத்தூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் ஒவ்வொரு சனிக்கிழமையும் டெண்டர் முறையில் தேங்காய் ஏலம் நடைபெறுகிறது. முத்தூர் சுற்றுவட்டார விவசாயிகள் 23 பேர் நேற்று விற்பனை கூடத்திற்கு 6517 தேங்காய்கள் விற்பனைக்கு கொண்டு வந்தனர்.

ஏலத்தில் முதல் தரம் ஒருகிலோ ரூ.27.80க்கும், இரண்டாம்தரம்ஒருகிலோ ரூ.24.15க்கும், சராசரி ரூ.27.30க்கும் ஏலம் போனது. 2.7 டன் தேங்காய்கள் மொத்தம் ரூ.74 ஆயிரத்துக்கு ஏலம் போனது என விற்பனைகூட மேற்பார்வையாளர் தங்கவேல் தெரிவித்தார்.

# துப்பாக்கி சூட்டில் தொழிலாளி பலி: மனித உரிமைகள் ஆணையத்தில் புகார் அளிக்க முடிவு

கூடலூர், அக். 31

தேனி மாவட்டம் கூடலூர் வனப்பகுதியில் வண்ணாத்திப் பாறை காப்புக் காட்டில்சட்டவிரோதமாக மின்வேலி அமைத்து வன விலங்குகள் வேட்டையாடப் படுவதாக வனத்துறையினருக்கு தகவல் வந்தது. அதன் பேரில் கூடலூர் வனவர்திருமுருகன்தலைமையில் வனக்காப்பாளர், வனக்காவலர் அடங்கிய 6 பேர் கொண்ட குழுவினர் 2 குழுக்களாக பிரிந்து ரோந்து பணியில் ஈடுபட்டனர்.

அப்போது மின்வேலி இருந்தது கண்டு பிடிக்கப்பட்டது. அதனை ஆய்வு செய்தபோதுகுள்ளப்பகவுண்டன் பட்டியை சேர்ந்த ஈஸ்வரன் (55) என்பவர் அப்பகுதியில் பதுங்கி இருந்தார். வனத்துறையினரை கண்டதும் அவர் தப்பியோட முயன்றுள்ளார். அப்போது ஈஸ்வரனுக்கும், வனத்துறையினருக்கும் இடையே நடந்த தகராறில் துப்பாக்கி சூடு நடத்தப்பட்டது.

இதில ஈஸ்வரன் துப்பாக்கி குண்டு பாய்ந்து உயிரிழந்தார். இதுகுறித்து கூடலூர் ரேஞ்சர் முரளிதரன், லோயர்கேம்ப் போலீஸ் நிலையத்தில் அளித்த புகாரின் பேரில்



போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து ஈஸ்வரனின் உடலை கைப்பற்றி தேனி க.விலக்கு அரசு ஆஸ்பத்திரிக்கு பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர்.

துப்பாக்கிச்சூட்டில் ஈஸ்வரன் உயிரிழந்தது தெரியவரவே அவரது உறவினர்கள் மற்றும் குடும்பத்தினர் சாலை மறியலில் ஈடுபட்டனர். போலீசார் அவர்களிடம் பேச்சு வார்த்தை நடத்தியும் கேட்காமல் மறியலில் ஈடுபட்டதால் பரபரப்பு ஏற்பட்டது. இதனை தொடர்ந்து ஈஸ்வரன் உடல் தேனி அரசு மருத்துவக்கல்லூரி ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்பட்டது.

அங்கு தேனி எஸ்.பி.பிரவீன் உமேஷ் டோங்கரே, ஸ்ரீவில்லிபுத்தூர் மேகமலை புலிகள் காப்பகத்தின் துணை இயக்குனர் ஆனந்த், உத்தமபாளையம் மாஜிஸ்திரேட் ராமநாதன் ஆகியோர் ஆய்வு மேற்கொண்டனர். மேலும் ஈஸ்வரனின் குடும்பத்தினரும், மாவட்ட கலெக்டரின் நேர்முக உதவியாளர்சிந்துவிடம்புகார் அளித்தனர். அவர்கள் துப்பாக்கி சூடு நடத்தியவர்கள் மீது உரிய விசாரணை நடத்தி கைது செய்ய வேண்டும்.குடும்பத்திற்கு இழப்பீடு வழங்க வேண்டும் என தெரிவித்தனர்.

நள்ளிரவில் துப்பாக்கி சூடு நடத்தி கொன்று விட்டு மறுநாள் காலையில் எங்களுக்கு தகவல் தெரிவித்தனர். ஒரு குற்றவாளி மீது எண்கவுண்டர் நடத்துவது போல வனத்துறைக்கு துப்பாக்கியால் சுட அதிகாரம் கொடுத்தது யார்? எனவே இப்பிரச்சினையில் போலீசாரும் எங்களை சமாதானம் செய்யும் முயற்சியிலேயே ஈடுபட்டு வருகின்றனர். குற்றவாளிகளை பிடிப்பதில் ஆர்வம் காட்டவில்லை. எனவே நாங்கள் மனித உரிமை ஆணையத்தில் புகார் அளிக்க உள்ளோம். அவர்கள் விசாரணை நடத்தினால்தான் இதில் உண்மை வெளிவரும். அதுவரை பிரேத பரிசோதனை நடத்துவதற்கும் நாங்கள் அனுமதி அளிக்காமல் கையெழுத்திட மறுத்துவிட்டோம் என்றனர்.

இறந்த ஈஸ்வரன் மீது ஏற்கனவே அவர்அமைத்த மின்வேலி தாக்கியதில் ஒருவர் உயிரிழந்தது தொடர்பான வழக்கு உள்பட 2 வழக்குகள் உள்ளன. இவர் சட்ட விரோதமாக தடை செய்யப்பட்ட வனப்பகுதியில் மின்வேலி அமைத்து வனவிலங்குகளை வேட்டையாடி வந்ததால்தான் துப்பாக்கி சூடு நடத்தப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளனர்.

தேனி அரசு மருத்துவக் கல்லூரி முன்பு 2ம் நாளாக ஈஸ்வரனின் குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள் போராட்டம் நடத்த முயன்றதால் பரபரப்பான சூழல் நிலவியது.

# மின்துறை ஊழியர் தூக்குப்போட்டு தற்கொலை

ஈரோடு, அக். 31

ஈரோடு மாவட்டம், குதிரை க்கல்மேடு, கோனேரிப்பட்டி பிரிவு, சாயபு தோட்டம் பகுதி யைச் சேர்ந்தவர் தாண்டவன் (47). குதிரைக்கல் மேடு கதவணை மின் நிலையத்தில், மின்சா ர்த்துறையில் ஓயர்மே னாக பணியாற்றி வந்தார். இவரது மனைவி சர ஸ்வதி (38). இவர், அப்பகுதியில் உள்ள தோட்டங்களில் விவசாய கூலி வேலைகளுக்கு சென்று வருவாராம். இவர்க ளுக்கு ஒரு மகன், ஒரு மகள் உள்ளனர். இருவரும் கல்லூரி யில் படித்து வருகின்றனர். தாண்டவன் மதுவுக்கு அடிமையானதால் அடிக்கடி மது குடித்துவிட்டு சரிவர வேலைக்கு செல்லாமல் இருந்து வந்துள்ளார். இதனால், கணவன், மனைவிக்கிடையே அடிக்கடி தகராறு ஏற்பட்டு வந்துள்ளது. இந்த நிலையில், நேற்று காலை வழக்கம் போல சரஸ்வதி தோட்ட வேலைக்கு சென்று விட்டாராம். சுமார் 10.30 மணியளவில் தாண்டவ னின் தாய் பழனியம்மாள் மட்டும் வீட்டில் இருந்துள்ளார். அப்போது, வெளியில் சென்று விட்டு வந்த தாண்டவன்வீட்டுக்குள்சென்றுகதவைதாழிட்டுக்கொண்டாராம்.

உடனடியாக பழனி யம்மாள் தனது மருமகள் சரஸ்வதி வேலை செய்யும் இடத்துக்குச் சென்று அதுகுறித்து கூறியுள்ளார். இருவரும் வீட்டுக்கு வந்து ஜன்னல் வழியாக பார்த்தபோது தாண்டவன், பேனில் கயிறால் தூக்கிட்ட நிலையில் தொங்கியுள்ளார். உடனடியாக அக்கம் பக்கத்தினர் உதவியுடன் கதவை உடைத்து உள்ளே சென்று தாண்டவனை மீட்டு, பெருந்துறை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர்.

அங்கு அவரை பரிசோதித்த மருத்துவர், ஏற்கனவே தாண்டவன் இறந்து விட்டதாக தெரிவித்தார். இதுகுறித்து, அம்மா பேட்டை போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

# தேசிய களரி போட்டியில் தமிழக அணி சார்பில் 8 பேர் பங்கேற்பு

உடுமலை, அக்.31

ஒலிம்பிக்கில் இந்திய அணி சார்பாக 18 வயதிற்கு மேற்பட்டவர்கள் கலந்து கொள்வதற்கான வீரர்கள் தேர்வு கோவாவில் நடைபெறுகிறது. 43 வகையான விளையாட்டுகள் அதில் அடங்கும்.அதில் முதல் முறையாக களரிப்பயட்டு சேர்க்கப்பட்டு உள்ளது..37வது தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகள் கோவாவில் இம்மாதம் தொடங்குகிறது.

இந்த போட்டிகளை பிரதமர் நரேந்திர மோடி தொடங்கி வைக்கிறார் .களரிப்பயட்டுப் போட்டிகள் நவம்பர் மாதம் 7 மற்றும் 8 ஆகிய தேதிகளில் நடைபெறுகின்றது.இதில் 300க்கும் மேற்பட்ட வீரர் மற்றும் வீராங்கனைகள் 12 மாநிலங்களில் இருந்து




கலந்து கொள்கின்றனர்.

இதில் தமிழ்நாடு களரி பயட்டு அசோசியேசன் சார்பில் மடத்துக்குளம் பகத்சிங் சிலம்பம் களரி மார்ஷியல்அறக்கட்டளை சார்பில் ஜீவா, கே.ருத்ரேந்தர், டி.விக்னேஸ்வரன். எம்.முத்துச்செல்வம், வி.தரன், எம்.விக்னேஷ், ஆர்.ராமசந்திரன்., கே. விசாலிஆகியோர் களரி பயட்டு போட்டியில் உடுமலை ,மடத்துக்குளம் பகுதியில் இருந்து கலந்து கொள்கின்றனர்.

7வகையானபிரிவுகளில் போட்டி நடைபெறுகின்றது. சுவடு, மெய்பயட்டு, உருமி வீசல்,சவுட்டி பொங்கல், கைப்போர், கேட்டுக்கரி, வாளும் பரிச்சா ஆகிய பிரிவுகளில் கலந்து கொள்கின்றனர்.

போட்டியில் கலந்து கொள்ளும்வீரர்களுக்கான ஆலோசனை கூட்டம் உடுமலை சுபாஷ் ரேணுகா தேவி அறக்கட்டளை அரங்கில் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு தமிழ்நாடு களரி பயட்டு ஸ்டேஷன் தமிழ்நாடு செயலாளர் ஆசான்வீரமணிதலைமை வகித்தார்.

லெப்டினன்ட் சுபாஷ் ரேணுகாதேவி அறக்கட்டளைநிறுவனர் எஸ்.ஆர்.எஸ் .செல்வராஜ் , விவேகானந்தா வித்யாலயா பள்ளி தாளாளர் மூர்த்தி, பணி நிறைவு நூலகர் கணேசன், ஜிவிஜி., காசாளர் சங்கர மகாதேவன் ஆகியோர்சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டு போட்டியில் கலந்து கொள்ளும் மாணவர்களுக்கு வாழ்த்து தெரிவித்தனர். இந்த தகவலை தமிழ்நாடு களரி பயட்டு அசோசியேசன் மாநில செயலாளர் ஆசான் வீரமணி தெரிவித்தார்.

# ஆத்தூர் அருகே ஆம்னி பஸ் அடுத்தடுத்து மோதி விபத்து 2 பேர் பலி

ஆத்தூர், அக். 31

தூத்துக்குடி மாவட்டம் மேல ஆத்தூர் குச்சிகாட்டை சேர்ந்தவர் செந்தில்குமார் (43). இவர் அப்பகுதியில் உள்ள தனியார் நிறுவனத்தில் வேலை பார்த்து வந்தார். இவர் வேலை முடிந்து தனது மோட்டார் சைக்களில் வீட்டிற்கு சென்று கொண்டிருந்தார். இரவு 10.30 மணிக்கு அவர் தெற்கு ஆத்தூர் நரசன்விளை அருகே சென்றார். அப்போது பின்னால் திருச்செந்தூரில் இருந்து கோவைக்கு சென்று கொண்டிருந்த ஆம்னி பஸ்சில் இடதுபக்கம் பொருட்கள் வைக்கும் கதவு திறந்த நிலையில் இருந்ததாக தெரிகிறது.

செந்தில்குமார் ஆம்னி பஸ்சை முந்திசெல்ல நினைத்துள்ளார். அப்போது பஸ்சில் பொருட்கள் வைக்கும் கதவு மோதியதில் மோட்டார் சைக்கிளில் இருந்து தவறி விழுந்து பலத்த காயமடைந்த அவர் சம்பவ இடத்திலே பரிதாபமாக உயிரிழந்தார். அதனை தொடர்ந்து மற்றொரு மோட்டார் சைக்கிளில் சென்ற தெற்கு ஆத்தூரை சேர்ந்த சாகுல் ஹமீது (43) என்பவரும் பஸ்சின் கதவு இடித்ததில் பலத்த காயமடைந்தார். எனினும் நிற்காமல் சென்ற பஸ்சின் கதவு நரசன்விளை தெற்கு தெருவை சேர்ந்த சுப்பையா (75) என்பவர் மீது மோதியது. இதில் அவர் சம்பவ இடத்திலேயே பலியானார். மேலும் ஆத்தூர் பஸ் நிறுத்தத்தில் நின்று கொண்டிருந்த மேலஆத்தூர் குச்சிக்காட்டை சேர்ந்த பிரியதர்ஷினி (23) மீது மோதியது. இதில் அவர் பலத்த காயமடைந்தார். இதனைத் தொடர்ந்து விபத்தை ஏற்படுத்திய ஆம்னி பஸ்சை அப்பகுதி மக்கள் வழிமறித்து போலீஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர். ஆத்தூர் இன்ஸ்பெக்டர் பாலமுருகன் காயமடைந்தவர்களை மீட்டு சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். பலியானவர்களின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்கு அனுப்பினர். மேலும் இது தொடர்பாக ஆம்னி பஸ் டிரைவர் குரும்பூர் அருகே உள்ள நாகன்னியாபுரத்தை சேர்ந்த மகேஷ் (30) என்பவரை கைது செய்து விசாரணை செய்து வருகின்றார்.

# மழை நீர் வடிகால் வசதி கேட்டு மனு



திருப்பூர், அக். 31

திருப்பூர்மாவட்டம் பல்லடம் வட்டத்திற்குட்பட்ட பூமலூர் அபிராமி கார்டன்பகுதியில்30க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வரக்கூடிய நிலையில் மழை பெய்யும் போது அப்பகுதியில் முறையான வடிகால் மற்றும் மழைநீர் செல்லக்கூடிய வழிகள் ஆக்கிரமிக்கப்பட்டிருப்பதால் மழைநீர் குடியிருப்பு பகுதிகளிலேயே தேங்கி நிற்கிறது.

இதனால் அப்பகுதி பொதுமக்கள் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாவதோடு மட்டுமல்லாமல் , விஷ ஜந்துக்கள் மழை நீரோடு வீட்டிற்குள் வந்து விடுகிறது. மேலும் நோய் ஏற்படும் அபாயம் உள்ளது. எனவே அப்பகுதியில் முறையான வடிநீர் வடிகால் வசதி ஏற்படுத்தி தர வேண்டும் .

மழைநீர் செல்லக்கூடிய பாதையில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி தர வேண்டும் என வலியுறுத்தி அப்பகுதி பொதுமக்கள் பா.ம.க., கிழக்கு மாவட்ட செயலாளர் ரவிச்சந்திரன் தலைமையில் நிர்வாகிகள் கிரிஷ் சரவணன் , ரவிச்சந்திரன் உள்ளிட்டோர் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் கோரிக்கை மனு அளித்தனர்.

# ஒகேனக்கல்லில் நீர்வரத்து 4 ஆயிரம் கனஅடியாக சரிவு

தர்மபுரி, அக். 31

கர்நாடக மாநிலத்தில் உள்ள கபினி, கிருஷ்ணராஜசாகர்அணைகளில் இருந்து தண்ணீர் திறப்பு மற்றும் காவிரி நீர்ப்பிடிப்பு பகுதி–களில் பெய்யும் மழையை பொறுத்து தருமபுரி மாவட்டம் ஒகேனக்கல்லுக்கு நீர்வ ரத்து அதிகரிப்பதும், குறைவதுமாக உள்ளது.

தற்போது காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழை குறைந்ததால் ஒகேனக்கல்லில் கடந்த 9 தினங்களாக நீர்வரத்து வினாடிக்கு 5 ஆயிரம் கன அடியாக



நீடித்து வந்தது.

இந்த நிலையில் இன்று காலை ஒகேனக்கல்லுக்கு நீர்வரத்து மேலும் சரிந்து 4 ஆயிரம் கனஅடியாக குறைந்து வந்து கொண்டிருக்கிறது.

இதன்காரணமாக மெயின் அருவி, சினி பால்ஸ், ஐந்தருவி ஆகிய அருவிகளில் தண்ணீர் சீறாக பாய்ந்து ஓடுகிறது.

காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழை குறைந்ததால் ஒகேனக்கல்லுக்கு வரும் நீர்வரத்தை தமிழககர்நாடக எல்லையான பிலிகுண்டுலுவில் மத்திய நீர்வளத்துறை அதிகாரிகள் தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர்.

# அய்யா பழ.நெடுமாறன் விரைந்து நலம் பெற விழைகிறேன்: முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்

மதுரை, அக். 31

மதுரை கோரிப்பாளையத்தில் உள்ள முத்துராமலிங்க தேவரின் முழு உருவ சிலைக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

பின்னர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உலகத் தமிழர் பேரமைப்பின் தலைவர் பழ.நெடுமாறன் இல்லத்திற்கு நேரில் சென்று, அவரது உடல்நலம் குறித்து விசாரித்தார். அவருடன் அமைச்சர்கள் மற்றும் பழ. நெடுமாறனின் குடும்பத்தினர் இருந்தனர். அதன் பிறகு தனது எக்ஸ் பக்கத்தில் கூறியிருப்பதாவது: மது



ரைக்குச் சென்றிருந்தபோது, உலகத் தமிழர் பேரமைப்பின் தலைவர் அய்யா பழ.நெடுமா றன் உடல்நலிவுற்றிருக்கும் செய்தியறிந்து, அவரது இல்லத்திற்கு நேரில் சென்று நலம் விசாரித்தேன். POTAவில் கைது செய்யப்பட்டு அவர் கடலூர் சிறைச்சாலையில் இருந்தபோது, நான் வேறொரு போராட்ட வழக்கில் அதே சிறைச்சாலையில் அடைக்கப்பட்டேன். அப்போது ஒரே பிளாக்கில் இருந்த நாங்கள் பல்வேறு உரையாடல்களில் ஈடுபட்டதை நினைவுகூர்ந்து பகிர்ந்து கொண்டோம். அய்யா பழ.நெடு மாறன் விரைந்து நலம் பெற விழைகிறேன். மதுரைக்குச்சென்றிருந்தபோது, உலகத்தமிழர் பேரமைப்பின் தலைவர் அய்யா பழ.நெடுமாறன் அவர்கள் உடல்நலிவுற்றிருக்கும் செய்தியறிந்து, அவரது இல்லத்திற்கு நேரில் சென்று நலம் விசாரித்தேன்.



# புதிய பாடலை வெளியிட்ட பார்க்கிங் படக்குழு



ஹரிஷ் கல்யாண் நடிக்கும் திரைப்படம் 'பார்க்கிங்'. இப்படத்தின் போஸ்டர் சமீபத்தில் வெளியானது.

பொறியாளன், வில் அம்பு, பியார் பிரேமா காதல், தாராள பிரபு உள்ளிட்ட பல படங்களில் நடித்து ரசிகர்களை கவர்ந்தவர் ஹரிஷ் கல்யாண் இவர் தற்போது ராம்குமார் பாலகிருஷ்ணன் இயக்கும் 'பார்க்கிங்'படத்தில்நடிக்கிறார்.திரில்லர்ட்ராமாவான 'பார்க்கிங்' திரைப்படத்தை 'பலூன்' பட இயக்குனர் கே.எஸ்.சினிஷ், சோல்ஜர்ஸ் ஃபேக்டரி சார்பில் தயாரிக்கிறார். மேலும் பேஷன் ஸ்டுடியோஸ் இணைந்து தயாரிக்கிறது.

இப்படத்தின் கதாநாயகியாக இந்துஜா நடிக்கிறார். மேலும் எம்.எஸ்.பாஸ்கர், ராம ராஜேந்திரன், பிரார்த்தனா நாதன், இளவரசு உள்ளிட்ட பலர் முக்கிய கதாப்பாத்திரத்தில் நடிக்கின்றனர். இப்படத்திற்கு சாம் சிஎஸ் இசையமைக்க, ஜிஜு சன்னி ஒளிப்பதிவு செய்கிறார். இப்படத்தின் போஸ்டர் சமீபத்தில் வெளியாகி கவனம் பெற்றது.

இந்நிலையில், இப்படத்தின் புதிய பாடலான 'செல்ல கல்லியே' பாடலின் லிரிக் வீடியோ வெளியாகியுள்ளது. இந்த வீடியோ இணையத்தில் வைரலாகி வருகிறது.



# சேலையில் ரசிகர்களுக்கு இன்ப அதிர்ச்சி கொடுத்த தமன்னா

தமிழில் அறிமுகமான தமன்னா, முன்னணி நடிகர்களான ரஜினி, விஜய், அஜித், சூர்யா உள்ளிட்டோருடன் நடித்து தற்போது பாலிவுட்டில் முன்னணி நடிகையாக வலம் வருகிறார்.

சமீபத்தில், பிரபல பாலிவுட் நடிகர் விஜய் வர்மாவுடனான காதலை உறுதிப்படுத்தினார் தமன்னா. இருவரும் இணைந்து லஸ்ட் ஸ்டோரிஸ் 2 என்ற வெப் தொடரில் நடித்துள்ளனர்.

இந்தநிலையில் சேலையில் இருக்கும் புகைப்படங்களைநடிகைதமன்னாதனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பகிர்ந்துள்ளார். ஒயிட் வித் பிளாக் நிற சேலையில் வளைந்து நெளிந்து போஸ் கொடுத்தபடி நடிகை தமன்னா பகிர்ந்துள்ள புகைப்படங்கள் ரசிகர்களுக்கு பயங்கர இன்ப அதிர்ச்சியை கொடுத்துள்ளது.

# நடிகர் விஜய்யின் லியோ திரைப்பட வெற்றி விழாவிற்கு காவல்துறை அனுமதி



லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில், லலித் தயாரிப்பில், விஜய், த்ரிஷா, சஞ்சய் தத், அர்ஜுன், கவுதம் மேனன் உள்ளிட்ட பலர் நடிப்பில் கடந்த 19 ஆம் தேதி வெளியான படம் லியோ. பல்வேறு சர்ச்சைகளைத் தாண்டி உலகம் முழுவதும் பிரமாண்டமாக வெளியான இப்படம் ரசிகர்கள் மத்தியில் கலவையான விமர்சனங்களைப் பெற்றாலும், வசூல் ரீதியாக மகத்தான சாதனை படைத்து வருகிறது. இந்த படத்தில் இடம்பெற்றுள்ள "நா ரெடிதான் வரவா" பாடல் பிரபலமானது.

லியோ படம் வெளியான முதல் நாளில் மட்டும் உலகம் முழுவதும் ரூ.148 கோடி வசூல் செய்து சர்வதேச அளவில் முதல் நாளில் அதிக வசூல் செய்த தமிழ்ப் படம் என்ற சாதனையைப் படைத்தது. மேலும் முதல் 4 நாட்களில் உலகம் முழுவதும் 400 கோடி ரூபாய் வசூல் செய்துள்ளதாகக் கூறப்பட்டது. மேலும் 7 நாளில் உலகம் முழுவதும் 461 கோடி ரூபாய்க்கு மேல் வசூலித்து சாதனை படைத்துள்ளதாகப் படக்குழு அறிவித்தது.

இந்த வெற்றியைக் கொண்டாட, வருகிற 1 ஆம் தேதி சென்னை நேரு உள்விளையாட்டு அரங்கில் பிரமாண்ட விழா நடத்த படக்குழு திட்டமிட்டு, இது தொடர்பாக பெரியமேடு காவல் நிலையத்தில் தயாரிப்பாளர் லலித் குமார், பாதுகாப்புக்கு அனுமதி கேட்டு மனு கொடுத்திருந்தார். இந்த விழாவில் விஜய்யும் கலந்துகொள்ளவுள்ளதாகவும் அந்த மனுவில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்தக் கடிதத்திற்கு போலீஸ் தரப்பில், விழாவில் முக்கிய பிரபலங்கள் யார் யார் கலந்து கொள்கிறார்கள், மொத்தம் எத்தனை நபர்கள் வருகிறார்கள் எனப் பல்வேறு கேள்விகள் எழுப்பி பதில் கடிதம் அனுப்பியது. பின்பு பாதுகாப்புக்கு அனுமதி வழங்குவது குறித்து பரிசீலனை செய்யப்பட்டது.

இந்தநிலையில்லியோவெற்றிவிழாவுக்குகாவல்துறைபல்வேறுநிபந்தனைகளுடன் அனுமதி வழங்கியுள்ளது. இதனால் ரசிகர்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். 200 300 கார்களுக்கு மட்டுமே உள்ளே வர அனுமதித்தும், பேருந்துகளில் வர அனுமதி மறுக்கப்பட்டு, அனுமதித்த எண்ணிக்கையின் அடிப்படையிலே டிக்கெட்டுகளை விற்பனை செய்ய வேண்டும் என பல்வேறு நிபந்தனைகளை விதித்துள்ளது. மேலும் நிகழ்ச்சியை குறித்த நேரத்தில் முடிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

காவல்துறை சார்பில் தடையில்லா சான்றிதழ் வழங்கப்பட உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. விழா நடைபெறும் இடம் விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திற்கு சொந்தமானது என்பதால் தடையில்லா சான்றிதழ் மட்டுமே தேவைப்படுகிறது.

# 1980களில் இந்தியாவுக்காக விளையாடிய கபடி வீரரின் உண்மைக் கதை

விக்ராந்த் ருத்ரா எழுதி இயக்கும் திரைப்படம் 'அர்ஜுன் சக்ரவர்த்தி ஜர்னி ஆஃப் எ அன்சாங் சாம்பியன்'. விஜய ராமராஜு மற்றும் சிஜா ரோஸ் முதன்மை வேடங்களில் நடித்துள்ள இப்படத்தில் அஜய், தயானந்த் ரெட்டி, அஜய் கோஷ் மற்றும் துர்கேஷ் ஆகியோர் முக்கிய கதாப்பாத்திரங்களில் நடித்துள்ளனர். ஸ்ரீனி குப்பலா தயாரித்துள்ள இப்படத்திற்கு விக்னேஷ் பாஸ்கரன் இசையமைக்க, ஜெகதீஷ் சீக்கட்டி ஒளிப்பதிவு செய்துள்ளார்.

'அர்ஜுன் சக்ரவர்த்தி' திரைப்படம் 1980களில் இந்தியாவுக்காக விளையாடிய கபடி வீரரின் உண்மைக் கதையை அடிப்படையாகக் கொண்டது. ஒரு விளையாட்டு வீரரின் வாழ்க்கையில் ஏற்படும் போராட்டங்கள் மற்றும் வெற்றிகளை திரையில் காட்டும் படமாக இது அமையும்.

இப்படம் குறித்து இயக்குனர் விக்ராந்த் ருத்ரா கூறியதாவது, 'அர்ஜுன் சக்ரவர்த்தி: ஜர்னி ஆஃப் அன்சாங் சாம்பியன்' படத்தை இயக்கியது பெருமையாக உள்ளது. அர்ஜுன் சக்கரவர்த்தியின் கதையை திரையில் உயிர்ப்பிக்கும் பயணம் சவாலாக இருந்தது. அர்ப்பணிப்பு, விடாமுயற்சி மற்றும் தன்னம்பிக்கை ஆகியவற்றிலிருந்து வெற்றி பிறக்கிறது என்ற பழமொழிக்கு அர்ஜுன் சக்ரவர்த்தியின் வாழ்க்கை ஒரு சான்றாகும். எங்களின் ஆர்வத்தையும் அர்ப்பணிப்பையும் புரிந்து கொண்டு பகிர்ந்து கொள்ளும் திறமையான நடிகர்கள் மற்றும் குழுவினருடன் பணியாற்றியது மிக்க மகிழ்ச்சி என்றார்.

மேலும், அர்ஜுன் சக்ரவர்த்தியாக விஜய் ராமராஜுவின் உழைப்பு உண்மையிலேயே அசாதாரணமானது. அர்ஜுன் சக்ரவர்த்தியின் பாத்திரத்தை சிறப்பாக வெளிப்படுத்தும் வகையில் எட்டு விரிவான உடல் மாற்றங்களுக்கு தன்னை அவர் உட்படுத்திக் கொண்டார். அவரது நடிப்பால் பார்வையாளர்கள் ஈர்க்கப்படுவார்கள் என்று நாங்கள் நம்புகிறோம் என்று கூறினார்.

# ரசிகர்களுக்கு டபுள் சர்ப்ரைஸ் கொடுத்த தங்கலான் படக்குழு



விக்ரம் நடிப்பில் உருவாகியுள்ள திரைப்படம் 'தங்கலான்'. இப்படத்தை பா.இரஞ்சித் இயக்கியுள்ளார்.

இயக்குனர் பா.இரஞ்சித் இயக்கத்தில் விக்ரம் நடிப்பில் உருவாகியுள்ள திரைப் படம் 'தங்கலான்'. இந்த படத்தில் பார்வதி, மாளவிகா மோகனன், பசுபதி, ஹரி, பிரிட்டிஷ் நடிகர் டேனியல் கால்டகிரோன் நடித்துள்ளனர்.ஞானவேல்ராஜாதயாரித்துள்ளஇப்படத்திற்குஜி.வி.பிரகாஷ்குமார் இசையமைத்துள்ளார்.

இப்படம் கர்நாடக மாநிலத்தில் உள்ள கே.ஜி.எஃப். குறித்த கதை என்று இயக்குனர் பா.இரஞ்சித் தெரிவித்திருந்தார். இதனால் இந்த படம் ரசிகர்களிடையே மிகப்பெரிய எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்நிலையில், இப்படத்தின் ரிலீஸ் தேதி மற்றும் டீசர் குறித்த அறிவிப்பை படக்குழு வெளியிட்டுள்ளது.

அதன்படி, 'தங்கலான்' திரைப்படம் ஜனவரி 26ஆம் தேதி வெளியாகவுள்ளதாக படக்குழு தெரிவித்துள்ளது. மேலும், இப்படத்தின் டீசர் நவம்பர் 1ஆம் தேதி வெளியாகும் என போஸ்டரை பகிர்ந்துள்ளது. இந்த போஸ்டரை ரசிகர்கள் சமூக வலைதளத்தில் அதிகம் பகிர்ந்து வருகின்றனர்.


# திரையரங்கு சென்று படம் பாருங்கள் கங்கனா ரணாவத் வேண்டுகோள்



பாலிவுட்டில் முன்னணி நடிகையாக இருப்பவர் கங்கனா ரணாவத். இவர் சமீபத்தில் பி.வாசு இயக்கத்தில் வெளியான சந்திரமுகி 2 திரைப்படத்தில் ராகவா லாரன்ஸுடன் நடித்தார். இந்த படம் எதிர்பார்த்த வெற்றியை பெறவில்லை. இதைத்தொடந்து கங்கனா ரணாவத்தின் 'தேஜஸ்' திரைப்படம் 27ஆம் தேதி வெளியானது. சர்வேஷ் மேவாரா இயக்கிய இந்தப் படத்தில் கங்கனா விமானப்படை அதிகாரியாக நடித்துள்ளார். இப்படம் வெளியான முதல் நாளில் இருந்தே வசூலில் சரிவைச் சந்தித்து வருகிறது. கூட்டம் இல்லாததால் பல திரையரங்குகளில் காட்சிகள் ரத்து செய்யப்பட்டன.

இந்நிலையில், நடிகை கங்கனா ரசிகர்களுக்குக் கோரிக்கை விடுத்து வீடியோ ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில், "கொரோனாவுக்கு முன்பே திரையரங்குகளுக்கு ரசிகர்கள் வருவது குறைந்தது. அதற்குப் பின் நிலைமை முற்றிலும் மாறிவிட்டது. இலவச டிக்கெட்டுகள் உட்பட நியாயமான சலுகைகள் வழங்கப்பட்டும் பல திரையரங்குகள் மூடப்பட்டு விட்டன. அந்தச் சரிவு தொடர்கிறது. அதனால், திரையரங்குகளுக்குச் சென்று படங்களைக் குடும்பம் மற்றும் நண்பர்களுடன் பார்த்து மகிழுங்கள். இல்லை என்றால் திரையரங்கை நடத்துகிறவர்கள் வாழ முடியாது" என்று தெரிவித்துள்ளார்.

# எச்.வினோத்திற்கு வாழ்த்து தெரிவித்த லோகேஷ்.. எதற்காக தெரியுமா?



தென்னிந்திய திரையுலகின் முன்னணி நடிகரான கமல் இயக்குனர் ஷங்கர் இயக்கத்தில் 'இந்தியன் 2' திரைப்படத்தில் நடித்துள்ளார். இதைத்தொடர்ந்து கமல்ஹாசனின்234வதுபடத்தை இயக்குனர் மணிரத்னம் இயக்குகிறார். இப்படத்தின் அறிமுக வீடியோ நவம்பர் 7ஆம் தேதி வெளியாகவுள்ளதாக படக்குழு அறிவித்திருந்தது.

இதைத்தொடர்ந்து கமலின் 233வது படத்தை 'நேர்கொண்ட பார்வை', 'வலிமை', 'துணிவு' போன்ற படங்களை இயக்கிய எச். வினோத் இயக்குகிறார். இப்படத்தின் அதிகாரப்பூர்வ அறிவிப்பு சமீபத்தில் வெளியானது. இப்படத்தின் மீதான எதிர்பார்ப்பு ரசிகர்கள் மத்தியில் அதிகரித்து வருகிறது.

இந்நிலையில், எச். வினோத்திற்கு வாழ்த்து தெரிவித்து இயக்குனர் லோகேஷ் கனகராஜ் சமூக வலைதளத்தில் பதிவு ஒன்றை பகிர்ந்துள்ளார். அதில், "கே.எச்.233 படத்திற்காக என் 'ஆண்டவர்' கமல்ஹாசனுடன் இணையும் எச்.வினோத் அண்ணாவிற்கு வாழ்த்துகள்" என்று பதிவிட்டுள்ளார்.

# உலகக்கோப்பை கிரிக்கெட்: இலங்கைக்கு எதிராக டாஸ் வென்ற ஆப்கானிஸ்தான் அணி பந்துவீச்சு தேர்வு

ஐசிசி நடத்தும் உலகக்கோப்பை கிரிக்கெட் தொடர் இந்தியாவின் பல்வேறு நகரங்களில் நடைபெற்று வருகிறது. இந்த தொடரின் இன்று நடைபெறும் லீக் ஆட்டத்தில் ஆப்கானிஸ்தான் இலங்கை அணிகள் மோதுகிறது.

இந்த ஆட்டத்தில் டாஸ் வென்ற ஆப்கானிஸ்தான் அணி பந்துவீச்சை தேர்வுசெய்துள்ளது. அதன்படி, இலங்கை அணி முதலில் பேட்டிங் செய்ய உள்ளது.

இரு நாட்டு அணி வீரர்கள் விவரம்: ஆப்கானிஸ்தான்; ரஹ்மானுல்லா குர்பாஸ், இப்ராஹிம் சத்ரான், ரஹ்மத் ஷா, ஹஷ்மத்துல்லா ஷாஹிதி (கே), அஸ்மத்துல்லா உமர்சாய், இக்ரம் அலிகில் முகமது நபி, ரஷீத் கான், முஜீப் உர் ரஹ்மான், நவீன் உல் ஹக், பசல்ஹா

இலங்கை; பதும் நிஸ்ஸங்க, திமுத் கருணாரத்ன, குசல் மெண்டிஸ் (கே), சதீர சமரவிக்ரம, சரித் அசலங்கா, தனஞ்சய டி சில்வா, ஏஞ்சலோ மேத்யூஸ், மஹீஷ் தீக்ஷனா, கசுன் ராஜித, துஷ்மந்த சமீர, டில்ஷான் மதுஷங்க.



# இங்கிலாந்துக்கு எதிரான ஆட்டம்... இந்திய அணியின் சிறந்த பீல்டராக ராகுல் தேர்வு



உலகக்கோப்பை தொடரில் இங்கிலாந்து அணிக்கு எதிரான ஆட்டத்தில் இந்திய அணி 100 ரன்கள் வித்தியாசத்தில் அபார வெற்றியை பெற்றது. இந்த ஆட்டத்தில் முதலில் பேட்டிங் ஆடிய இந்திய அணி 50 ஓவர்களில் 9 விக்கெட்டுகள் இழப்பிற்கு 229 ரன்கள் சேர்த்தது. சிறப்பாக ஆடிய கேப்டன் ரோகித் சர்மா 87 ரன்களும், சூர்யகுமார் யாதவ் 49 ரன்களும் எடுத்தனர். இங்கிலாந்து அணி தரப்பில் டேவிட் வில்லி 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார். அடுத்து களமிறங்கிய இங்கிலாந்து அணி 34.5 ஓவர்களில் 129 ரன்களுக்கு ஆல் அவுட்டாகியது. அந்த அணியின் நட்சத்திர வீரர்களான ஜோ ரூட் மற்றும் பென் ஸ்டோக்ஸ் இருவரும் டக் அவுட்டாகி வெளியேறினர்.

அதிகபட்சமாக லிவிங்ஸ்டன் 27 ரன்கள் எடுத்தார். இந்திய அணி தரப்பில் முகமது சமி 4 விக்கெட்டுகளையும், பும்ரா 3 விக்கெட்டுகளையும், குல்தீப் யாதவ் 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர். இந்நிலையில், இந்த உலகக்கோப்பை தொடரின் ஒவ்வொரு ஆட்டத்திலும் சிறப்பாக பீல்டிங் செய்யும் இந்திய வீரருக்கு பி.சி.சி.ஐ சார்பில் தங்கப்பதக்கம் வழங்கப்படுகிறது. அதன்படி இங்கிலாந்து அணிக்கு எதிரான நேற்றைய ஆட்டத்தில் சிறப்பாக பீல்டிங் செய்த வீரருக்கான விருது கே.எல்.ராகுலுக்கு வழங்கப்பட்டுள்ளது. நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் கிறிஸ் வோக்ஸ் கொடுத்த கேட்ச்சை கே.எல்.ராகுல் அபாரமாக பிடித்தார். அதனால் அவருக்கு இந்த விருது வழங்கப்பட்டுள்ளது. கடந்த நியூசிலாந்துக்கு எதிரான ஆட்டத்தில் சிறந்த பீல்டராக தேர்வு செய்யப்பட்ட ஸ்ரேயாஸ் அய்யர் தங்கப்பதக்கத்தை கே.எல்.ராகுலுக்கு அளித்தார்.

# ஐ.எஸ்.எல். கால்பந்து: பஞ்சாப்பை வீழ்த்திய சென்னை அணி



சென்னையில் உள்ள ஜவஹர்லால் நேரு ஸ்டேடியத்தில் நேற்று நடந்த 202324 இந்தியன் சூப்பர் லீக் (ஐஎஸ்எல்) போட்டியில் பஞ்சாப் எப்சிக்கு எதிரான ஆட்டத்தில் சென்னையின் எப்சி 51 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

சென்னை அணியில் ரையான் எட்வர்ட்ஸ், கனோர் ஷீல்ட்ஸ்(2), ரபெல்கிரிவெல்லாரோ, வின்சிபரேட்டோ ஆகியோர் கோல் அடித்தனர். ஆட்டத்தின் 86வது நிமிடத்தில் கிருஷ்ணானந்த சிங் குண்டோங்பாம் பஞ்சாப் அணியின் ஒரே கோலை அடித்தார்.

5வது ஆட்டத்தில் ஆடிய சென்னை அணிக்கு இது 2வது வெற்றியாகும். இது புள்ளிப்பட்டியலில் டாப் 6க்கு முன்னேற சென்னை அணிக்கு உதவியது.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.